இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

ஞாயிற்றுக்கிழமை 08.03.2026

# நிதிஷ்குமாரின் கதியைப் பாருங்கள்!

**பத்து முறை பீகார் மாநில முதலமைச்சராக இருந்த நிதிஷ்குமாரைப் பந்தாடிவிட்டது பா.ஜ.க. அவரையே ஆக்ஸிஜனாக வைத்து வளர்ந்த பா.ஜ.க., இப்போது அவரது இருதயத்தையே பறித்து உறுப்புகளை மாற்றி விட்டது. 'எல்லாம் அவரால்' என்று சொல்லப்பட்ட நிதிஷ்குமார், நிர்கதியாக டெல்லிக்குப் போகப் போகிறார். இதைத் தான் திருதராஷ்டிர ஆலிங்கனம் என்பார்கள்.**

மகாபாரதக் கதையில் ஒரு காட்சி...

பாரதப் போர் முடியும்போது பாண்டவர்கள் திருதராஷ்டிரனிடம் வணக்கம் சொல்ல வருவார்கள். பீமனை அணைத்து அழிக்க திருதராஷ்டிரன் திட்டமிடுவார். 'பீமா வா, உன்னை கட்டிப் பிடிக்க வேண்டும்' என்று திருதராஷ்டிரன் கூப்பிடுவார். கிருஷ்ணனுக்கு திருதராஷ்டிரனைப் பற்றித் தெரியும் என்பதால் பீமன் போல ஒரு வெண்கலச் சிலையை செய்து திருதராஷ்டிரன் முன் நிறுத்துவார். ஒரே தழுவலில் அந்தச் சிலையை சுக்குநூறாக நொறுக்குவார் திருதராஷ்டிரன். இதற்குப் பெயர்தான் 'திருதராஷ்டிர ஆலிங்கனம்' என்று பெயர். அந்தக் கதிக்குத் தான் ஆளாக்கப்பட்டுள்ளார் நிதிஷ்குமார். அது கதை. இப்போது நிதிஷ்குமாருக்கு நடந்திருப்பது உண்மை.

கடந்த நவம்பர் மாதம் பீகாரில் சட்டசபைத் தேர்தல் நடந்தது. இதில் பா.ஜ.க. - ஐக்கிய ஜனதாதளம் கூட்டணி அமைத்து போட்டியிட்டன. மொத்தம் 243 சட்டசபை தொகுதிகள் உள்ள நிலையில் பா.ஜ.க. 89 தொகுதிகளிலும், நிதிஷ் குமாரின் ஐக்கிய ஜனதாதளம் 85 தொகுதிகளிலும் வென்றன. நிதிஷ் குமார் 10வது முறையாக பீகார் முதல்வரானார்.

பீகார் தேர்தலின்போது, நிதிஷ் குமார் தான் முதலமைச்சர் வேட்பாளர் எனக் கூறி பிரச்சாரம் செய்தது பா.ஜ.க. அதனால் தான் ஆட்சிக்கு வந்தது அக்கூட்டணி. ஆனால் மூன்றே மாதத்தில் நிதிஷின் பதவியைப் பறித்து விட்டது பா.ஜ.க.

இந்நிலையில் தான் தற்போது நிதிஷ் குமார் மாநில அரசியலை விட்டு தேசிய அரசியலுக்குள் நுழைகிறார். பீகாரில் காலியாக உள்ள 5 ராஜ்யசபா இடங்களுக்கான வேட்புமனு தாக்கல் இன்று முடிவடைகிறது. இதற்கு நிதிஷ் குமார் வேட்பு மனு தாக்கல் செய்துள்ளார். விரைவில் அவருக்கு ஒன்றிய அமைச்சர் பதவி வழங்கப்படலாம். மோடி அமைச்சரவையில் அதிகாரமற்று நிதிஷ்குமாரை உட்கார வைக்கப் போகிறார்கள்.

**பீகார் மாநிலத்தின் முதலமைச்சராக பா.ஜ.க.வைச் சேர்ந்த ஒருவர் அரியணை ஏற இருக்கிறார். பீகார் மாநிலத்தில் முதல் முறையாக பா.ஜ.க.வின் ஆட்சி அமைய உள்ளது. பீகாரில் இதுவரை பா.ஜ.க. ஆட்சி அமைந்ததே இல்லை. முதல்வராக ஒருவர்கூட பா.ஜ.க.வில் இருந்தது இல்லை.**

1974 ஆம் ஆண்டில் இருந்து பீகார் மாநில அரசியலில் இருப்பவர் நிதிஷ் குமார். முதல்முறையாக 2000ஆம் ஆண்டு தேசிய ஜனநாயக கூட்டணியில் போட்டியிட்டு முதல்வரானார்.

இதுவரை 10 முறை பீகார் மாநிலத்தின் முதலமைச்சராக இருந்துள்ளார். அவரையே முடக்கிவிட்டது பா.ஜ.க. மோடியை மிகக்கடுமையாக தொடக்க காலத்தில் இருந்து எதிர்த்தவர் நிதிஷ்குமார். அந்த அரசியலை ஒழுங்காகச் செய்யாததன் விளைவைத் தான் நிதிஷ்குமார் இப்போது அனுபவிக்கிறார்.

2014ஆம் ஆண்டில் மோடிதான் பிரதமர் வேட்பாளர் என்று அறிவித்தபோது பா.ஜ.க.வுடனான உறவை முறித்துக் கொண்டவர் நிதிஷ். பின்னர் அவரே அவருக்கு ஆதரவைத் தெரிவித்தார். 2023 ஆம் ஆண்டு மோடிக்கு எதிரான 'இந்தியா' கூட்டணியில் முதல் தலைவராக இருந்தவரும் நிதிஷ் தான். 'இந்தியா' கூட்டணியின் முதல் கூட்டத்தை பாட்னாவில் மிகச்சிறப்பாக நடத்தியவரும் அவர்தான். திடீரென பின்வாங்கினார் நிதிஷ். பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்தார். 2025 பீகார் சட்டசபைத் தேர்தலில் பாதிக்கு பாதி இடங்களை நிதிஷ்குமாரிடம் பறித்தது பா.ஜ.க. இப்போது அவரிடம் இருந்து முதலமைச்சர் பதவியையே பறித்துவிட்டது பா.ஜ.க.

முதலமைச்சராகப் பொறுப்பேற்ற மூன்று மாதங்களிலேயே அந்தப் பதவியை விட்டு விலகி ராஜ்யசபா எம்.பி.யாக நிதிஷ் குமார் முடிவெடுத்திருப்பது அவரது விருப்பம் அல்ல, கட்டாயம் ஆகும். 'எப்போதும் பீகாரிகளுக்காகப் பாடுபடுவேன்' என்று கூறிவந்த அவர், அவர்களை விட்டுவிட்டு டெல்லிக்குப் போனது நிர்ப்பந்தமே தவிர வேறல்ல. பா.ஜ.க.வைச் சேர்ந்தவரை முதலமைச்சர் ஆக்க, நிதிஷ்குமாரின் அரசியல் வாழ்க்கை பலியிடப்பட்டது. பா.ஜ.க.வுக்கு பாதசேவை செய்தால் என்ன நடக்கும் என்பதற்கு சமீபத்திய உதாரணங்கள் மகாராஷ்டிராவும் பீகாரும்.

மராட்டியத்தில் தேசியவாத காங்கிரசை உடைத்தார்கள். சிவசேனாவை உடைத்தார்கள். உடைத்து வந்தவர்கள் இப்போது பா.ஜ.க.வுக்கு பாதம் தாங்கிகளாக மாறிக் கிடக்கிறார்கள். 2024 மகாராஷ்டிரா சட்டப்பேரவைத் தேர்தல் ஏக்நாத் ஷிண்டே தலைமையில் நடத்தப்பட்டது. ஆனால், 'மகாயுதி' கூட்டணி வெற்றி பெற்ற பிறகு, பா.ஜ.க-வின் தேவேந்திர பட்னாவிஸ் முதலமைச்சராகப் பதவியேற்றார். ஷிண்டே துணை முதலமைச்சராகத்தான் ஆனார். அஜீத் பவார் மர்மமான முறையில் மறைந்தும் போனார். மறுநாளே அவர் மனைவி துணை முதலமைச்சராக ஆக்கப்பட்டுவிட்டார். பா.ஜ.க. ஆட்சி தொடர்கிறது. இதுதான் மராட்டியத்தின் இன்றைய அரசியல்.

நிதிஷ் குமார் பதவி விலக எதிர்ப்பு தெரிவித்து அவரது கட்சியினர் போராட்டம் நடத்தி வருவதைப் பார்க்க பரிதாபமாக இருக்கிறது. அவர்களால் என்ன செய்ய முடியும்? இதனைத்தான் பீகார் மாநிலத்தில் இருந்து தேஜஸ்வீ அபாய எச்சரிக்கை செய்துள்ளார்.

**"கூட்டணிக் கட்சிகளை ஹைஜாக் செய்வதுதான் பா.ஜ.க.வின் வாடிக்கை. நிதிஷ்குமாரின் கட்சியை பா.ஜ.க. ஹைஜாக் செய்துவிடும் என தேர்தலுக்கு முன்பே சொன்னேன். கூட்டணிக் கட்சிகளை அழிப்பது பா.ஜ.க.வின் வாடிக்கையாக இருந்து வருகிறது. மகாராஷ்டிராவில் சிவசேனா, பீகாரில் ஐக்கிய ஜனதா தளம், தமிழ்நாட்டில் அ.தி.மு.க. என தங்களுடன் கூட்டணி வைப்பவர்களை அழிக்க முயற்சிக்கிறது பா.ஜ.க. பீகாரில் நிதீஷ்குமார் பதவி விலகுவது தமிழ்நாட்டுத் தேர்தலிலும் எதிரொலிக்கும் நிகழ்வாக அமைந்துள்ளது" என்று தேஜஸ்வீ மிகச் சரியாகச் சொல்லி இருக்கிறார்.**

**நாம் சொன்னால் எடப்பாடி பழனிசாமி கேட்க மாட்டார். இதோ நிதிஷ் குமாரின் கதியைப் பார்த்தாவது திருந்த வேண்டும் எடப்பாடி பழனிசாமி.**

# இனமானப் பேராசிரியரின் நினைவு தினம் மார்ச் 7 !

# தொடர் வெற்றியின் நாயகரான தாங்கள் மீண்டும் வெற்றி பெற்று திராவிட மாடல் நல்லாட்சியை தொடர வாழ்த்துகள்!

## கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு இனமானப் பேராசிரியர் புதல்வர் அ.அன்புச்செல்வன் நெகிழ்ச்சி கடிதம்!

**சென்னை, மார்ச் 8–**

**கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இனமானப் பேராசிரியர் அவர்களின் புதல்வர் அ.அன்புச் செல்வன் நெகிழ்ச்சியுடன் கடிதம் எழுதியுள்ளார்.**

**அக்கடிதத்தில் அ.அன்புச் செல்வன் அவர்கள், தொடர் வெற்றியின் நாயகரான தாங்கள் மீண்டும் வெற்றி பெற்று திராவிடமாடல் நல்லாட்சியை தொடர நல்வாழ்த்துக்கள் என்று நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டுள்ளார்.**

**இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பேராசிரியர் அவர்களின் புதல்வர் அ.அன்புச் செல்வன் எழுதிய கடிதம் வருமாறு:**



**"அன்பு கெழுமிய நண்பர், தலைவர், திராவிட மாடல் அரசின் மானமிகு, பாசமிகு முதல்வர் ஸ்டாலின் அவர்களே,**

அன்பான வணக்கம்,

இன்றைய தினம் தமிழ்நாட்டிற்கான கனவுகள் மெய்ப்பட வேண்டும் என்று தங்களின் பெயரால் Stalin Statement என்பது 2021 திருச்சி சிறுகனூரில் தாங்கள் வெளியிட்ட தமிழகத்திற்கான விடியல் பயணத்தின் நீட்சியாக அமைந்துள்ளது. முத்தான அறிவிப்புகள். தமிழ்நாட்டை நம்பர் 1 மாநிலமாக மாற்றும். வாழ்த்துகள்.

இன்றைய தினம் பேரறிஞர் அண்ணா 1967 ஆம் ஆண்டு பதவியேற்ற நாள். இந்நன்நாளில் அண்ணா கண்ட கனவுகளை நிறைவேற்றும் வகையில் அமைந்துள்ளது உங்களின் அறிவிப்புகள்.

நாளைய தினம் இனமானப் பேராசிரியரின் நினைவு தினம், அவராலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களாலும் 1980'ல் இளைஞரணியை துவக்கி அதன் செயலாளராக நியமித்த நேரத்திலிருந்து கழகத்தை காப்பாற்ற வல்லவர் தாங்கள் தான் என்று உறுதியாக நம்பினர். அவர்களின் எதிர்பார்ப்புகளை மிஞ்சும் வகையில் உங்களது

அர்ப்பணிப்பு உணர்வும், கழகத்தை மேலும் வலுவுள்ளதாக ஆக்கியது மட்டுமல்லாமல் கழகம் அடுத்த ஐம்பது ஆண்டுகளுக்கு வெற்றிகரமாக இயங்கும் வகையில் பலப்படுத்தவும் செய்துள்ளது போற்றத் தகுந்த ஒன்று. உங்களையே மிஞ்சும் வகையில் இன்றைய இளைஞரணிச் செயலாளர் தம்பி உதயநிதி ஸ்டாலின் அவர்களின் செயல்பாடுகள் உள்ளன.

தொடர் வெற்றியின் நாயகரான தாங்கள் மீண்டும் வெற்றி பெற்று திராவிட மாடல் நல்லாட்சியை தொடர வாழ்த்துகள்.

**வெல்வோம் ஒன்றாக!!!**
**மலரட்டும் திராவிட மாடல் 2.0.**
**வெல்க!!! வளர்க !!! திமுக.**

இவ்வாறு அ.அன்புச் செல்வன் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## 500 ஏக்கரில் 10 லட்சம் பேர் அமரும் வகையில் பிரம்மாண்ட ஏற்பாடுகள்:

# திருச்சி தி.மு.க. மாநில மாநாட்டில் முக்கிய அறிவிப்புகளை முதல்வர் வெளியிடுவார்!

## மாநாட்டுப் பணிகளை பார்வையிட்ட பின் அமைச்சர் கே.என்.நேரு பேட்டி!

**திருச்சி, மார்ச் 8 -**

**திருச்சி சிறுகனூரில் கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கும் தி.மு.க. மாநில மாநாட்டை பிரம்மாண்டமாக நடத்தும் வகையில் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.**

சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு 'ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும்' என்கிற தலைப்பில் திருச்சி மாவட்டம் சிறுகனூரில் நாளை (மார்ச் 9ந் தேதி) தி.மு.க. மாநில மாநாடு நடைபெற உள்ளது. 2021ம் ஆண்டு மாநாடு நடத்திய அதே இடத்திலேயே தற்போதும் நடைபெறுகிறது. திறந்தவெளி மாநாடாக நடைபெறும் இங்கு, தொண்டர்கள் அமர்வதற்கு 200 ஏக்கர் இடமும், 25 ஆயிரம் வாகனங்கள் நிறுத்துமிடத்துக்கு இடமும் தயார் செய்யப்பட்டு வருகிறது. தற்போது தொண்டர்கள் அமரும் பகுதி முழுவதும் இளஞ்சிவப்பு நிறத்தில் தரை விரிப்புகள் விரிக்கப்பட்டுள்ளன.

இந்த மாநாட்டில் 10 லட்சம் பேர் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கும் நிலையில், மொத்தம் 5 லட்சம் நாற்காலிகள் திடலில் போடப்பட உள்ளன. அமைச்சர் கே.என்.நேரு, கடந்த சில நாட்களாக மாநாடு நடக்கும் இடத்தில் முகாமிட்டு, இரவு பகலாக பம்பரமாக சுழன்று பணிகளை விரைவுபடுத்தி வருகிறார்.

நாளை (மார்ச் 9ந் தேதி) மாநாட்டு திடலில் அமைக்கப்பட்டுள்ள 100 அடி உயர கொடிக்கம்பத்தில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கட்சிக் கொடியை ஏற்றி வைக்கிறார். அதன்பிறகு மாநாட்டு நிகழ்வுகள் தொடங்குகின்றன.

கொடியை ஏற்றி வைத்த பிறகு மாநாட்டு மேடையின் பின்புறம் உள்ள தனியார் தொழிற்பூங்காவில் முதல்வர் ஓய்வெடுக்கிறார். மாநாட்டில் திரைப்பட இசையமைப்பாளர் ஸ்ரீகாந்த் தேவா இன்னிசை கச்சேரி நடைபெறுகிறது.

அதன்பிறகு, மாலையில் மாநாட்டுத் திடலுக்கு வரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மேடையின் முன்புறம் அமைக்கப்பட்டுள்ள அரை கி.மீ. நீள 'ரேம்ப்'பில் தொண்டர்கள் மத்தியில் நடந்து வருகிறார். தி.மு.க.வின் முன்னணி நிர்வாகிகள் பேசி முடித்தவுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசுகிறார்.

இந்த மாநாட்டில் தி.மு.க. கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்பார்களா என்று உறுதி செய்யப்படவில்லை.

இந்நிலையில் அமைச்சர் கே.என்.நேரு இன்று மாநாட்டுப் பணிகளை நிர்வாகிகளுடன் சென்று பார்வையிட்டு ஆலோசனை நடத்தினார். அதன் பின்னர் அமைச்சர் கே.என்.நேரு நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:



திருச்சி மாவட்டம் சிறுகனூர் பகுதியில் நாளை (9 தேதி) தமிழ்நாடு வெல்லட்டும் ஸ்டாலின் பயணம் தொடரட்டும் என்ற மாபெரும் மாநாடு நடைபெற உள்ளது. இந்த மாபெரும் மாநாட்டில் 10 லட்சம் நிர்வாகிகள் கலந்து கொள்ள உள்ளனர். மாநாட்டிற்கு வரக்கூடிய அனைவருக்கும் கழிவறை வசதி, குடிநீர் வசதி உள்ளிட்ட அனைத்து விதமான அடிப்படை வசதிகளும் தேவையான அளவிற்கு செய்யப்பட்டுள்ளது. மாநாட்டிற்கு வரக்கூடிய அனைத்து வாகனங்களும் நிறுத்துவதற்காக பிரத்தியகமாக இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாடு திராவிட கழகத்திற்கு திருப்பு முனையாக அமையும். இந்த மாநாடு முழுக்க முழுக்க தி.மு.க.வின் மாநாடு. மாநாட்டிற்கு பல்வேறு மாவட்டங்களில் இருந்து தொண்டர்கள் வருகை தருவதால் போக்குவரத்து சீரமைப்பு மற்றும் மாற்றம் செய்வதற்கு காவல்துறையினர் உரிய ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

நாளை (மார்ச் 9 தேதி) மதியம் 3 மணிக்கு கலை நிகழ்ச்சியுடன் மாநாடு தொடங்க உள்ளது. 5:30 மணிக்கு தமிழக முதல்வர் , திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் அவர்கள் கழகக் கொடியேற்றி மாநாட்டை தொடக்கி வைக்க உள்ளார்.

கடந்த தேர்தலின் போது இதே இடத்தில் மகளிர் உரிமைத்தொகை போன்ற 7 வாக்குறுதிகளை அறிவித்தார். அது மிகப்பெரிய திருப்புமுனையாக அமைந்தது. அதேபோன்று இந்த மாநாட்டில் பல்வேறு புதிய அறிவிப்புகளை வெளியிடுவார் என எதிர்பார்க்கின்றோம். ஏற்கனவே அறிவித்த வாக்குறுதிகளை எப்படி நிறைவேற்றி இருக்கிறோம் என்பதை நீங்களே பார்த்திருப்பீர்கள் .அதே போன்று புதிய அறிவிப்புகளோடு சிறந்த மாநாடாக இது அமையும். தேர்தல் அறிக்கையில் இருந்து ஏதாவது ஒன்று, இரண்டு அறிவிப்புகளை இங்கு வெளியிடலாம்..

எதை செய்ய முடியுமோ அதை முதலமைச்சர் அறிவிப்பார். இது தி.மு.க. மாநாட்டில் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்பது குறித்து முதல்வர் முடிவு செய்வார்.

இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின் போது மாவட்டச் செயலாளர்கள் வைரமணி, காடுவெட்டி தியாகராஜன் எம்.எல்.ஏ., மாநகரச் செயலாளர் மேயர் அன்பழகன், ஸ்டாலின் குமார் எம்.எல்.ஏ., நிர்வாகிகள் துரைராஜ், குடமுருட்டி சேகர் காஜாமலை விஜய் மற்றும் பலர் உடன் இருந்தனர். தொடர்ந்து அமைச்சர் கே.என்.நேரு மாநாட்டு பணிகளை பார்வையிட்டு, நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தி அறிவுரைகளை வழங்கினார்.

இந்நிகழ்வில் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, வடக்கு மாவட்டச் செயலாளர் காடுவெட்டி தியாகராஜன் எம்.எல்.ஏ., மாநகரச் செயலாளர் மாநகராட்சி மேயர் அன்பழகன், ஸ்டாலின் குமார் எம். எல்.எல்,ஏ., பொருளாளர் துரைராஜ், மாணவரணி ஆனந்த், ஒன்றியச் செயலாளர்கள் மாத்தூர் கருப்பையா, அந்தநல்லூர் கதிர்வேல், சித்ரா ஹோட்டல் பாரி வள்ளல், பகுதி செயலாளர்கள் மோகன் தாஸ், காஜாமலை விஜய், நாகராஜன், கமால் முஸ்தபா, ராம்குமார், வக்கீல் இளங்கோ, மணிவண்ண பாரதி மாநகர அயலக அணி அமைப்பாளர் துபேல் அகமது, மத்திய மாவட்ட முன்னாள் பகுதி செயலாளர் தில்லை நகர் கண்ணன்,பொதுக்குழு உறுப்பினர்கள் கிராப்பட்டி செல்வம், புத்தூர் தர்மராஜ்,திருச்சி மாநகராட்சி மண்டல குழு தலைவர்கள் விஜயலட்சுமி கண்ணன், துர்கா தேவி,மாநகரத் துணைச் செயலாளர் கவுன்சிலர் கலைச் செல்வி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் கலந்தர் பஷீர்,

மாவட்டப் பிரதிநிதிகள் வக்கீல் மணிவண்ண பாரதி, சோழன் சம்பத்,கவுன்சிலர்கள் கலைச்செல்வி, விஜயா ஜெயராஜ், புஷ்பராஜ், ராமதாஸ், மஞ்சுளா பாலசுப்பிரமணியன், வட்டச் செயலாளர்கள் புத்தூர் பவுல் ராஜ்,வாமடம் சுரேஷ், பி.ஆர்.பி.பாலசுப்பிரமணியன், மார்சிங் பேட்டை செல்வராஜ், தனசேகர், பந்தல் ராமு, சர்ச்சில்,ரஜினி கிங்,அபூர்வா மணி, எம்.ஆர் எஸ்.குமார்,சிந்தாமணி பாலமுருகன் உள்பட ஏராளமான கலந்து கொண்டனர்.

# கழகத்தின் சார்பில் போட்டியிட 15,372 விருப்ப மனுக்கள் பெறப்பட்டுள்ளன!

**2026** தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் தி.மு.கழகத்தின் சார்பில் போட்டியிடுவதற்கான விருப்ப மனுக்கள் பெறப்படும் என 20.02.2026 முதல் 06.03.2026 வரை தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டு, விருப்ப மனு பெறுவது 6.3.2026 அன்றுடன் நிறைவடைந்தது.

கழக உடன்பிறப்புகள் மிகுந்த எழுச்சியோடும், உற்சாகத்தோடும் வரலாறு காணாத வகையில் 15,372 விருப்ப மனுக்களை வழங்கியுள்ளனர்.

கழகத்தலைவர் தங்கள் தொகுதியில் போட்டியிட வேண்டும் என 1,473 விருப்ப மனுக்கள் அளிக்கப்பட்டுள்ளன.

வரும் சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் கழகத்தின் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைவது உறுதியாகிவிட்ட உற்சாகத்தில் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட கழகத்தினர் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றனர்.